இலங்கை மட்டக்களப்பு மாவட்ட
எழுத்தாளர் சங்கம்,
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
இணைந்து நடத்தும்

# தமிழ்பேசும் சமூகங்களிடையே கலை, இலக்கிய, பண்பாட்டுப் பெறுமானங்கள்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

நாள்: *27.08.2021*

கட்டுரையினைப் பின்வரும் மின்னஞ்சல் மூலமாகச் சமர்ப்பிக்கலாம்.

**Email: maddueluthalarsangam@gmail.com**

**தொடர்புக்கு : 0094779028965, 0094779918586**

## ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர். முருகு தயாநிதி**
தலைவர்
மாவட்ட எழுத்தாளர் சங்கம்
மட்டக்களப்பு மாவட்டம்.

**முனைவர். ர. சுரேஷ்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, கற்பகம் உயர் கல்விக் கழகம்
கோயம்புத்தூர் – 641021, தமிழ்நாடு, இந்தியா.

## இணை ஒருங்கிணைப்பாளர்கள்

**எம்.ஏ.சி. ஜெய்னுலாப்தீன்**
மாவட்ட காலாசார உத்தியோகத்தர்
மாவட்டச் செயலகம்
மட்டக்களப்பு.

**திரு. கி. குணநாயகம்**
மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர்
மாவட்டச் செயலகம்
மட்டக்களப்பு.

**செல்வி. யோ. தனுசியா**
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்
மாவட்டச் செயலகம்
மட்டக்களப்பு.

## கருத்தரங்க குழு

திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்
திரு. மைக்கல் கொலின்
திரு. த. இன்பராசா
ஜனாப். ஜுனைதா ஷெரீப்
திரு. க. ரூபன்
திரு. இரா. தவராசா
புலவர். கி. அருளம்பலம்
ஜனாப். ஜிப்ரி ஹஸன்
திரு. க. கயல்வேந்தன்
திரு. தெ. சசிகுமார்

## மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம்
## மாவட்ட செயலகம், மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கமானது 2021 ஆம் ஆண்டு, தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ், மாவட்டச் செயலாளரின் ஆலோசனைக்கு அமைவாகத் தாபிக்கப்பட்டது. இதன் நோக்கம், மறைந்து, அழிந்து, அருகிக் கொண்டு செல்லுகின்ற அருங்கலைகளையும் இலக்கியங்களையும் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பதாகும். இவ்வாறான நோக்கங்களை படிப்படியாக நிறைவு செய்யும் வகையில், சர்வதேச கருத்தரங்கம் ஒன்றினைச் சர்வதேச தமிழ் ஆய்விதழுடன் இணைந்து முன்கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் "தமிழ் பேசும் சமூகங்களிடையே கலை, இலக்கிய, பண்பாட்டுப் பெறுமதிகள்" எனும் தலைப்பினை அடிப்படையாக் கொண்டு, ஆய்வு மாநாட்டினைச் செய்வதென்று முடிவு பெறப்பட்டது.

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், இந்தியாவின் முதல் Google Scholar, CrossRef indexed மற்றும் DOI எண்பதிவு பெற்ற தமிழ் ஆய்விதழாகவும், பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற ஆய்விதழாகவும், பல்வேறு ஆய்வு மேம்பாட்டுப் பயிலரங்குகளையும் கருத்தரங்குகளையும் முன்னெடுத்துத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்ற ஆய்விதழாகவும் இருந்துவருகின்றது. அத்துடன் தமிழாய்வுகளை உலகத்தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் ஆய்வுப்புல வல்லுநர்களின் மதிப்பீட்டைப் பெற்று தரமான ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுதல், அவற்றை உலகளாவிய பயன்பாட்டிற்கும் அங்கீகாரத்திற்கும் ஏற்றவகையில் எண்ணிமப்படுத்துதல் (Digitize), குறுந்திட்ட ஆய்வுகளுக்கு நிதியுதவி அளித்தல் முதலிய பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. மேலும், பன்னாட்டுத் தமிழறிஞர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தமிழ் ஆய்வு வளர்ச்சிக்கான முன்னெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், ஆய்வாளர்களுக்கும் ஆய்வுப்புல அறிஞர்களுக்குமிடையே ஆய்வு சார்ந்து உரையாடுவதற்கும்

விவாதிப்பதற்குமான வாய்ப்புகளையும் அதற்கான சூழலையும் ஏற்படுத்தித் தருதல், தமிழ்ச் சூழலில் இதுவரையிலான ஆய்வுப்போக்குகளையும் அவற்றின் போதாமைகளையும் மதிப்பிட்டு, புதிய களங்களில் புதிய அணுகுமுறைகளில் ஆய்வு செய்ய ஆய்வாளர்களை ஊக்குவித்தல், ஆய்வுத்திறன் மேம்பட்ட செழுமைமிக்கதொரு ஆய்வுச்சமூகத்தை உருவாக்குதல் போன்ற பல்வேறு ஆய்வுச் செயல்பாடுகளில் அதிக அக்கறையோடு முன்னிற்கின்றது. இதன் தொடர்ச்சியாக இக்கருத்தரங்கை இலங்கை மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்து நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கருத்தரங்க நோக்கம்

தமிழ்ச் சமூகமானது, கலைவளங்களும் இலக்கிய ஆக்கங்களும் செறிந்த பண்பட்ட சமூகமாக வரலாற்றுக் காலந்தொட்டே அறியப்பட்டு வருகின்றது. இச்சமுகம் பல்வேறு விதமான தாக்குறவுகளுக்கு மத்தியிலும் செழுமை குன்றாமல் தொடர்ந்து தனது பண்பாட்டு மூலங்களையும் மானுட ஆற்றல் வளங்களையும் சமூக இயங்கியலின் ஒருபகுதியாகவே பேணிக்கொண்டு வருவதை அவதானிக்க இயலுகின்றது. உலக அளவில் தமிழின் மேம்பட்ட கலை மற்றும் கலாச்சார வாழ்வியல் இன்று பேசுபொருளாகவும் பயிலப்படக் கூடியதாகவும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகு சூழலில் தமிழ், கலை, இலக்கிய, பண்பாடுகள் தமிழ்ச் சமூகத்தில் பெறும் முக்கியத்துவங்களையும், அவை சார்ந்த தமிழ் பேசும் மக்களின் வாழ்வியக்க அமைவு நெறிகளையும் ஆய்ந்து விளங்கப்படுத்தும் நோக்கில் இக்கருத்தரங்கமானது திட்டமிடப்பட்டுள்ளது

## ஆய்வுப் பொருண்மைகள்

தமிழ், கலை, கலாசார, இலக்கிய மட்டங்களில் தொழிற்படுகின்ற எந்த ஒன்றையும் ஆய்வுப் பொருளாகக் கொண்டு கட்டுரை அமையலாம்.

ஆய்வாளர்கள் தங்கள் எடுத்துக்கொள்கின்ற விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் ஆய்வு முடிவுகளை ஆதாரங்களுடன் முன்வைத்து கலை, கலாச்சார, இலக்கிய ஆக்கங்கள் சார்ந்த வாழ்வியலையும் அதன் அவசியத்தையும் வெளிப்படுத்தும் விதமாக ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ் பேசும் சமூகத்தில் காணப்படும் நாட்டார் மற்றும் செவ்வியல் கலைமரபுகள்சார் பெறுமதிகள், சமய பெறுமதிகள், பண்பாட்டுப் பெறுமதிகள், தமிழ் இலக்கிய வகைமைகளான சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, பயண இலக்கியங்கள், நாட்குறிப்புகள், நாட்டார் பாடல்கள், பழைய வழக்காறுகள், கதைப்பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவற்றில் பதிவாகியுள்ள சமூக வாழ்வியல்சார் பெறுமதிகள் போன்ற பொருள்களில், ஆய்வுப் பொருண்மைக்கு ஏற்ப, ஆய்வு மேற்கொண்ட ஆய்வுக் கட்டுரைகளை எதிர்பார்க்கின்றோம்.

## ஆய்வுக் கட்டுரை அமைப்பு

1. ஆய்வுக் கட்டுரையைச் சொற்கோப்பில் (Word Document) A4 தாளில், 1.15 இடைவெளியுடன், 9 அச்சுப் புள்ளியில், லதா யுனிகோடு (Unicode) எழுத்துருவில் கணினிவழி தட்டச்சு செய்து, maddueluthalarsangam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, 20.08.2021 திகதிக்குள் அனுப்புதல் வேண்டும்.

2. பக்கவரையறைகள் கருத்தில்கொள்ளப்படமாட்டாது, ஆனால், 7 பக்கங்களுக்கு மேற்பட்டதாக கட்டுரை அமைவது சிறப்பு.

3. கட்டுரைத் தலைப்பு, கட்டுரையாளர் பெயர், பதவி, துறையின் பெயர், கல்லூரி / பல்கலைக்கழகம், நகரம், அஞ்சல் குறியீடு, நாடு, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியன கட்டாயம் இடம்பெற வேண்டும்.

4. ஆய்வுச்சுருக்கம், குறிச்சொற்கள், முன்னுரை, ஆய்வுரை (துணைத்தலைப்புகளுடனும், விவாதங்களுடனும்) ஆய்வுப் பயன்கள், முடிவுரை ஆகியன உள்ளடக்கியதாக கட்டுரையின் வடிவம் அமைந்திருக்க வேண்டும்.

5. மேற்கோள்கள் எங்கெங்கு எடுத்தாளப்படுகின்றனவோ, அந்தந்த இடங்களிலேயே ஆசிரியர் பெயர், ஆண்டு (சுவாமிநாதஐயர், உ.வே., 1984) மட்டும் குறிப்பிட வேண்டும்.

6. மேற்கோள்கள் விபரங்கள் (ஆசிரியர் பெயர், (வெளிவந்த ஆண்டு) புத்தகத்தின் பெயர், (வெளிவந்த பதிப்பு வரிசை) வெளியீட்டாளர் பெயர் மற்றும் முழுமுகவரி.) கட்டுரையின் இறுதியில் இடம்பெற வேண்டும்.

7. ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமைய வேண்டும். ஆய்வுக்கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல் கண்டடைவாக இருத்தல் வேண்டும். இதற்கு முன் வேறெந்த ஊடகங்களிலும் வெளிவராததாக இருக்க வேண்டும்.

8. கட்டுரை தமிழில் மட்டுமே இருத்தல் வேண்டும். (கட்டுரைத் தலைப்பு, ஆய்வுச்சுருக்கம் தமிழில் தரலாம். ஆங்கில மொழி பெயர்ப்பு கட்டாயம் அல்ல)

9. சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் ஆய்விதழுக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC – Care Listed Journal) வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியிடுவதற்கு பரிந்துரைக்கப்படும். அக்கட்டுரைகள் மட்டும் இணையத்தில் சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணமாக (இலங்கை ஆய்வாளர்கள் – ரூ. 4000.00 (இலங்கைப் ரூபா), இந்திய ஆய்வாளர்கள் – ரூ. 1500.00 (இந்திய ரூபா)) செலுத்த வேண்டும். வெளியீட்டுக் கட்டணம் கட்டுரை தேர்வான பிறகு ஆய்விதழுக்குச் செலுத்தினால் போதுமானது. ஆய்விதழுக்குரிய கட்டணத்தைச் செலுத்துவதற்கான வங்கிவிபரம் தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்). கருத்தரங்கில் பங்கேற்கும் அனைவரும் கட்டாயம் பதிவுக்கட்டணம் மட்டும் செலுத்தித் தங்களின் பங்கேற்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

## கருத்தரங்கில் பங்கேற்க பதிவுக் கட்டணம்

இலங்கை ஆய்வாளர்கள் – ரூ. 500.00 (இலங்கைப் ரூபா)
இந்திய ஆய்வாளர்கள் – ரூ. 200.00 (இந்திய ரூபா)

## பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டிய வங்கி விபரம்

### இலங்கை

Bank Name: Bank of CEYLON
Account No: 81279714
Name: M/S District Cultural Board Authorities
District Secretariat
Batticaloa

### இந்தியா

Bank Name: Karur Vysya Bank (KVB)
NAME: ISWARYA M
Account No: 1675192000001091
Ifsc code: KVBL0001675

இந்திய ஆய்வாளர்கள் இந்திய வங்கிக் கணக்குக்கும், இலங்கை ஆய்வாளர்கள் இலங்கை வங்கிக் கணக்குக்கும் பணம் செலுத்துதல் வேண்டும்.

கட்டண விபரங்களை – 0094779028965 என்ற புலன் இலக்கத்திற்கும் கட்டுரைகளையும் பதிவுப்படிவத்தை – maddueluthalarsangam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் 20.08.2021 ஆம் தேதிக்குள் அனுப்பவும்.

## கட்டுரை மாதிரி வடிவம்

https://drive.google.com/file/d/10ZKyQ2wtfGGVr7RPRy1nolLtv1OTnG94/view?usp=sharing

## நன்றி